தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.36/ந/2026, நாள்14.08.2026

நா. நாகராஜன்,
ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி, விருதுநகர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், பஜனைக் கூடத் தெரு, எண். 25/32 என்ற முகவரியில் வசிக்கும் திரு. நா. நாகராஜன் என்பவரது 23.01.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.01.2026 அன்று பெறப்பட்டு, 36/ந/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், பஜனைக் கூடத் தெரு, எண். 25/32 என்ற முகவரியில் வசிக்கும் திரு. நா. நாகராஜன் என்பவரின் 23.01.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் நிர்வாக சீர்கேடுகளை கீழ்கண்டவாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் 2012-13 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டுகளுக்குரிய சொத்துவரி மற்றும் இதர வரிகளையும் உரிய காலத்தில் நான் செலுத்தி உள்ளேன். அதற்கான விவரங்களை அட்டவணைப்படுத்தி கீழ்கண்டவாறு தெரிவிக்கின்றேன்.

நிதியாண்டுகளின் விபரங்கள்	சொத்து வரி	செலுத்திய நாள்	வரி விதிப்பு எண்.
2012-2013	ரூ. 532.00	28.12.2012	40876
2013-2014 I	ரூ. 532.00	03.04.2013	40876
2013-2014 II	ரூ. 532.00	18.09.2013	40876
2014-2015	ரூ.1064.00	11.03.2015	40876
2015-2016	ரூ.1064.00	01.03.2016	40876
2016-2017	ரூ.1064.00	17.02.2017	40876
2017-2018	ரூ.1064.00	22.03.2018	130/030/00900 Old No.130/40876
2018–2019	ரூ.1596.00	22.02.2019	130/030/00900 Old No.130/40876

2019-2020 I	ரூ.532.00	06.02.2020	130/030/00900 Old No.130/40876
2019-2020 II	ரூ.532.00 (Adjusted)		
2020-2021	ரூ.1064.00	07.03.2021	130/030/00900 Old No.130/40876
2021-2022	ரூ.1064.00	21.10.2021	130/030/00900 Old No.130/40876
2022-2023	ரூ.1330.00	01.12.2022	130/030/900056 Old No.130/40876
சொத்து வரி	25% உயர்வு		
2024-2025	ரூ.705.00	15.04.2025	130/030/900056 Old No.130/40876
2025-2026	ரூ.706.00	01.07.2025	130/030/900056 Old No.130/40876

இந்நிலையில், **26.06.2022** அரசு விடுமுறைத் தினத்தன்று வருவாய் ஆய்வாளர் லெஷ்மி அவர்களும் மற்றும் வரிவசூலிப்பவர் திருமதி பாண்டிச்செல்வி அவர்களும் நேரில் வீட்டிற்கு வந்து, கையில் எந்தவித ஆவணங்களும் இன்றி மற்றும் சொத்துவரிக்கான கேட்பு அறிவிப்பும் வழங்காமல் என்னிடம் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய பாக்கி தொகை ரூ.**804/-** உள்ளது எனவும், அதனை உடனடியாக செலுத்த வேண்டுமெனவும் கூறினார்கள்.

உடனே நான் (**2012-13 to 2021-22** வரையிலான) அனைத்து இரசீதுகளையும் நேரில் காண்பித்தேன். ஆனால் அந்த இரசீதுகளை கண்டு கொள்ளவில்லை. நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி பாக்கி வரித்தொகை ரூ.**804/-**ஐ செலுத்த தவறினால் நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்கள்.

என்னால் அரசிற்கு வருவாய் இழப்பீடு ஏற்படக்கூடாது என்ற உயரிய எண்ணத்தில், அரசின் நலனை கருதி ரூ.**804/-**ஐ நேரில் கொடுத்துவிட்டேன்.

மறுதினமான **27.06.2022** அன்று ரூ.**804/-**க்கான இரசீதினை பெற்றுக்கொண்டேன். பெற்றுக்கொண்ட இரசீதில் குறைபாடுகள் இருப்பதை அறிந்தேன். அதன் குறைபாடுகளை கீழ்கண்டவாறு விவரிக்கின்றேன்.

I) விண்ணப்பதாரரின் பெயர் என்ற இடத்தில் எனது பெயர் (நா. நாகராஜன்) இடம் பெறவில்லை. ஆனால் மாறாக பொருள்படாத வாசிக்க முடியாத நீண்ட பெயர் இடம் பெற்றிருந்தது. வண்ண கலரிட்ட அடையாளம் இட்டுள்ளேன்.

2) முகவரியின் கதவு எண். **25/32**, என்றிருக்க வேண்டும். ஆனால், இரசீதில் கதவு எண்.**32/25** என உள்ளது. மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் இருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள் அனைத்திலும் **25/32** பஜனைக் கூடத் தெரு என்றே இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

நான், ஏற்கெனவே உரிய காலத்தில் செலுத்திய நிதியாண்டுகளான **2020-21** மற்றும் **2021-22**க்கு மீண்டும் அதே நிதியாண்டுகளுக்கு என்னிடம் ரூ.**804/-** வசூல் செய்யப்பட்டதை கண்டு அதிர்ச்சி அடைந்தேன்.

மேலும், உரிய காலத்தில் செலுத்திய இரசீதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும் **27.06.2022**ல் பெறப்பட்ட இரசீதில் உள்ள தொகைக்கும் அதிக அளவில் வேறுபாடுகள் உள்ளன.

3) முறையாக உரிய காலத்தில் 2020-21 மற்றும் 2021-22 ஆகிய இரண்டு நிதியாண்டுகளுக்குரிய இரசீதில் சொத்து வரி விதிப்பு எண். 130/030/00900, பழைய எண். 130/40876 என உள்ளது. ஆனால் 2020-21, 2021–22, நிதியாண்டுகள் முடிந்து வசூல் செய்யப்பட்ட 27.06.2022 அன்று பெறப்பட்ட ரூ.804/-க்கான இரசீதில் 130/030/00264, பழைய எண். 130/26296 என உள்ளது. ஏன் ? என்று தெரியவில்லை. மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட (மேற்படி நிதியாண்டு) 12.02.2026 தேதியிட்ட சான்றொப்பமிடப்பட்ட இரசீதில் சொத்து வரி விதிப்பு எண்.130/030/900421 பழைய சொத்துவரி விதிப்பு எண். 130/26296 என உள்ளது. பெறப்பட்ட ஒவ்வொரு இரசீதுகளிலும் சொத்துவரி விதிப்பு எண்கள் முற்றிலும் மாறுப்பட்டு உள்ளது ஏன் ? என்று தெரியவில்லை.

மேலும், 27.06.2022ல் பெறப்பட்ட இரசீதில் குறிப்பிடப்பட்டுள்ள 2020-21 மற்றும் 2021-22ம் நிதியாண்டுக்கான தொகை ரூ.804/-, 2022–23ம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்டுள்ளது. அதாவது கிட்டத்தட்ட 2 வருடம், 2 மாதம், 27 நாட்கள் கழித்து வசூல் செய்யப்பட்டுள்ளது ஏன் என்பது தெரியவில்லை.

உரிய காலத்தில் சொத்து வரிகள் அனைத்தும் மேற்படி நிதியாண்டுகளுக்கு செலுத்திய பின்னர், ஏன் ? செலுத்திய நிதியாண்டுகளுக்கு மீண்டும் 2 வருடம் 2 மாதம், 27 நாட்கள் கழித்து வசூலிக்கப்பட்டது. மேலும் மேற்படி நிதியாண்டுகளுக்கு வரி செலுத்தாத நிலுவைத்தாரர்களின் பட்டியலிலும் எனது பெயரும் இடம் பெறவில்லை.

இத்துடன் முறையான உரிய நிதியாண்டு (2020-21. 2021–22) காலத்தில் செலுத்திய 2 இரசீதுகளையும் மற்றும் அதே நிதியாண்டுகளுக்கு காலம் கடந்து 27.06.2022ல் வழங்கப்பட்ட இரசீதனையும் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட 12.02.2026 தேதியிட்ட சான்றொப்பம் இடப்பட்ட இரசீதனையும் இத்துடன் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

எனவே, எனது மனுவில் தெரிவிக்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் அன்றைய நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பணிபுரிந்த அலுவலர்களின் மீது தவறுகள் கண்டறியப்பட்டால் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன். நடவடிக்கை எடுக்கப்பட்ட விபரத்தினை தயவு செய்து தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.".

2) மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3) எதிர்மனுதாரரான ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.7157/2022/அ1 நாள் 06.03.2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுக்ளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"இப்புகார் மனு தொடர்பான திரு. நாகராஜன் என்பரும், திரு. நாகபதி என்பவரும் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள்.

மனுதாரர் திரு. நாகராஜன், எண். 25, பஜனைக்கூடத் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் சொத்துவரி நீக்கக் கோரிய மனு நாள் 27.06.2022 வரப்பெற்றது. மனுவில் பஜனைக் கூடத் தெரு, கதவு எண். 25-க்கு வரிவிதிப்பு எண். 130/26296க்கு ரூ.804/- செலுத்த வேண்டும் என கேட்பு அறிவிப்பு வந்துள்ளதாகவும், மனுதாரர் அத்தொகையினை செலுத்துவதாகவும், மேற்குறிப்பிட்ட கதவு எண். 25-க்கு சொத்துவரி விதிப்பு எண். 130/40876 தனது பெயரில் (என். நாகராஜன்) புதியவரி, விதிப்பு செய்யப்பட்டதாகவும், வரி விதிப்பு எண். 130/26296-ஐ, ரத்து செய்யுமாறும்

கேட்டுக்கொண்டுள்ளார். மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்பெற்று 30.06.2022 அன்று நகர்மன்ற தீர்மான எண். 113ன்படி சொத்துவரி ரத்து செய்யப்பட்டுள்ளது.

திரு. நாகபதி, 24 பஜனைக்கூடம் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் 05.12.2022ன் கடிதம் T.S.No. 986/2, 996/2, 996/1ல், கதவிலக்கம் 25 உடைய வீடு தனக்கும் (நாகபதி) தனது சகோதரர் நாகராஜன் என்பவருக்கும் பாத்தியப்பட்டு இருவரின் பெயரிலும் நகராட்சிக்கு சொத்துவரி செலுத்தி வருவதாகவும், தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். O.S No.0300002/2013-ன்படி தனக்கும், தனது குடும்ப உறுப்பினர்களுக்கும் வழக்கு நடைபெற்று வருகிறது என்றும் தெரிவித்து, தற்சமயம் சொத்துவரி ரசீதில் தனது பெயர் (நாகபதி) பெயர் நீக்கம் செய்யப்பட்டு நாகராஜன் என்ற பெயரில் சொத்துவரி கேட்பு வந்துள்ளது என்று தெரிவித்தும், சொத்துவரி விதிப்பில் தனது பெயரை (என். நாகபதி) இணைக்குமாறு மனு ஒன்றினை நகராட்சிக்கு அனுப்பியுள்ளார்.

திரு. நாகராஜன் 25, பஜனைக் கூடம் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் என்பவரின் 29.05.2023 மற்றும் 12.06.2013 நாளிட்ட விண்ணப்பங்களில் T.S. No.986/2, 996ல் கதவு எண். 25, சொத்துவரி விதிப்பு எண். 130/40876ல் வீட்டிற்கும், காலிமனைக்கும் சேர்த்து சொத்துவரி தனது பெயரில் புதிதாக வரிவிதிக்கப்பட்டு செலுத்தி வருவதாகவும், மேற்குறிப்பிட்ட கதவு எண். 25ன் முதல் தள குடியிருப்பு பகுதிக்கு புதிய கதவு எண் வழங்கவேண்டும் என்றும் மனு ஒன்றினை அளித்துள்ளார்.

அதன் அடிப்படையில், இவ்வலுவலக அறிவிப்பு நாள் 26.06.2023ல் நகராட்சியில் இருந்து திரு. நாகராஜன் என்பவருக்கு வரிவிதிப்பு செய்ய சம்பந்தப்பட்ட இடத்தின் பதிவு பெற்ற ஆவணங்களுடன் 30.06.2023ல் மாலை 4 மணிக்கு நேரில் ஆஜராகுமாறு அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால், மனுதாரர் திரு. நாகராஜன் என்பவர் ஆஜராகவில்லை. ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நினைவூட்டல் அறிவிப்பு கடிதம் எண்.7157/2022/அ1, நாள் 03.07.2023ல் 12.07.2023 அன்று நேரில் ஆஜராகுமாறு நா. நாகராஜன் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

திரு. நாகராஜன் என்பவரின் விண்ணப்பம் கடிதம் நாள் 19.07.2023 ல் T.S. No. 996க்கு உரிய ஆவணங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து வரகாலதாமதம் ஆகின்றதாகவும், தனக்கு ஏற்கனவே உள்ள வரி தரை மற்றும் முதல் தளத்திற்கே விதிக்கப்பட்ட வரி செலுத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

திரு. நாகராஜன் அவர்களின் விண்ணப்பம் நாள் 28.07.2023ல் T.S.NO. 986/2, 996-ன் சொத்துகளுக்கு உரிய ஆவணங்களை சேகரிக்க அதிக கால அவகாசம் தேவைப்படுவதாகவும், தன்னுடைய 12.06.2023ன் மனு மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம் எனவும், ஆவணங்களை முழுவடிவில் சேகரித்த பின்னர் புதிதாக விண்ணப்பத்தினை அளிக்கின்றேன் என்பதனையும், எனது விண்ணப்பத்தினை நான் இன்று (28.07.2023) திரும்பப் பெறுகின்றேன் என்பதனையும் தெரிவித்து கடிதம் ஒன்றினை அளித்துள்ளார்.

இந்நகராட்சியின் அறிவிப்பு ந.க.எண். 7157/2022/அ1, நாள் 25.09.2023–ன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மனுதாரரின் கோரிக்கைக்கு இணங்க 12.06.2023 மனுவின்மீது நடவடிக்கை மேற்கொள்ளாமல் கோப்பு முடிக்கப்பெற்றுள்ளது என்ற விபரம் மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.5123/2012/எப்1, நாள் 06.12.2012–ன் (திருமதி கண்ணம்மாள் என்பவருக்கு முகவரியிடப்பட்டது) அறிவிப்பின்படி, திரு. நாகராஜன் என்பவர் கதவு

எண். 25ல் கட்டிடம் கட்ட அனுமதி கேட்டு 12.10.2012ல் சமர்ப்பித்த வரைபடங்கள் க.வி.எண். 190/2012 நாள் 22.10.2012ல் அனுமதி மறுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. நாகராஜன் என்பவரின் 12.03.2024ம் தேதிய விண்ணபத்தில் பெயர் மாற்றம் செய்வதற்கு முன்னர் எனது கூரை வீட்டிற்கு 1997–98 வரை ரூ.59/-ம், 1998–99 முதல் 2007–2008 வரை ரூ.74/-ம், 2008-2009 முதல் 2011-2012 வரை ரூ.81/-ம் என்ற நிலையில் சொத்து வரியினை செலுத்தி வந்தேன் என்று தெரிவித்துள்ளார். பின்னர், 2012-2013– II முதல் 2017-2018 நிதியாண்டுவரை ரூ.1064/- சொத்துவரியாகவும், திடக்கழிவு பயன்பாடு கட்டணம் ரூ.270 (2017-2018) என நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டு , அதனையும் என் பெயரில செலுத்தி, செலுத்திய உரிய ரசீதுகளையும் இத்துடன் இணைத்துள்ளேன். தொடர்ந்து 12 ஆண்டுகளுக்குமேல், எனது பெயரில் செலுத்திவந்த சொத்துவரி விதிப்பில் பிறிதொரு நபரின் பெயரை எவ்வித அறிவிப்பும் எனக்கு வழங்காமல் சேர்த்திருப்பது முற்றிலும் முரணாகும் எனத் தெரிவித்துள்ளார்.

என். நாகராஜன் என்பவர் 2012-2013 IIம் ஆண்டு முதல் செலுத்திவரும் சொத்துவரி (130/40876) புதியதாக விதிக்கப்பட்ட வரியாகும். மேலும், நா. நாகராஜன் என்பவர் 1998-1999 முதல் 2011-2012 வரை சொத்துவரியினை செலுத்தி வந்தேன் என்று குறிப்பிடுவது வரிவிதிப்பு எண். 130/20296 நா. நாகபதி, நா. நாகராஜன் என்ற வரிவிதிப்பு எண் ஆகும்.

இவ்வலுவலக இறுதி அறிவிப்பு ந.க.எண். 7167/2022/அ1, நாள் 25.03.2024ல் கதவு எண். 25க்கு சொத்துவரி விதிப்பாளர் பெயர் திருத்தத்தினை மேற்கொள்ள பதிவு பெற்ற ஆவணங்களுடன் மனுதாரர்கள் நா. நாகபதி, நா. நாகராஜன் இருவரும் 27.03.2024 புதன்கிழமை மாலை நேரில் ஆஜராக அறிவிப்பு அனுப்பப்பட்டது.

முன்னாள் ஆணையாளர் திரு. இராஜமாணிக்கம் அவர்களின் புகார் ந.க.எண். 7157/2022/அ1, நாள் 26.03.2024 ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு புகார் செய்யப்பட்டுள்ள கடிதத்தில் திரு. நாகராஜன், திரு. நாகபதி ஆகிய சகோதரர்களின் வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுவருவதையும், புதிய சொத்துவரி விதிப்பு 2012-2013 II ஆம் அரையாண்டு முதல் திரு. நாகராஜன் என்பவரின் பெயரில் வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதையும், 130/26296ஐ திரு. நாகராஜன் என்பவரின் 27.06.2022ம் தேதிய விண்ணபத்தின்படி, நீக்கம் செய்யப்பட்டதையும், வரிவிதிப்பு எண். 130/40876ல் திரு. நாகராஜன் என்ற பெயருடன் திரு. நாகபதி என்ற பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், தான் ஒரு பத்திரிக்கை ஆசிரியர் என்றும் கையூட்டு பெற்றுகொண்டு பணிபுரிவதாகவும், லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் அளிப்பேன் என்றும், உரத்தகுரலில் மிரட்டி உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சகோதரர்களுக்கு இடையில் உள்ள குடும்ப பிரச்சணையில் அதிகாரிகளை மிரட்டும் திரு. நாகராஜன் என்பவர் மீது மேல்நடவடிக்கை தொடரும்படி ஆணையர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. நாகராஜன் என்பவரின் 01.04.2024ஆம் தேதிய விண்ணபத்தில் விசாரணைக்குரிய தேதியை மாற்றி அமைத்து தனக்கு தெரிவிக்குமாறு தெரிவித்துள்ளார்.

திரு. நாகராஜன் என்பவரின் 16.04.2024ஆம் தேதிய விண்ணபத்தில் விசாரணைக்குரிய தேதியை மாற்றுவதற்கு கடிதம் மற்றும் தொலைபேசி வாயிலாக தெரிவித்ததாகவும், ஆனால், நாளது தேதிவரை எவ்வித பதிலும் பெறப்படவில்லை எனவும், தனது விண்ணபத்தின் மீது உத்தரவுகள் ஏதும் பிறப்பிக்கப்பட்டிருப்பின் விபரத்தினை தனக்கு தெரிவிக்குமாறு திரு நா. நாகராஜன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மண்டல செயற்பொறியாளர் (மற்றும்) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் (பொ) அவர்களின் கடித ந.க.எண். 1191/2024/அ2, நாள் 18.04.2024ல் திரு. நாகராஜன், திரு நாகபதி என்ற பெயரை நீக்கிவிட்டு, ஏற்கனவே இருந்த திரு. நாகராஜன் பெயரை மட்டும் குறிப்பிட்டு சொத்துவரி மற்றும் இதரவரி விதிப்புகளை ஏற்படுத்தி உரிய ரசீதுகள் வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. இவ்வறிவிப்பு மீதான விரிவான அறிக்கையை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கும், வழக்கறிஞருக்கும் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண். 1191/2024/அ2, நாள் 23.05.2024 மற்றும் 22.06.2024ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திற்கும், வழக்கறிஞர் திரு. இராஜேந்திரன் என்பவருக்கு நாளது தேதிவரை எவ்வித அறிக்கையும் நகராட்சி மூலம் வழங்கப்படவில்லை எனவும், வழக்கறிஞர் திரு. இராஜேந்திரன் என்பவர் மூலம் லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகத்திற்கு மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு புகார் கடிதம் அனுப்பி நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி புகார் மீதான உண்மைதன்மையை ஆய்வு செய்து நேரடி விசாரணைக்கு உரிய விளக்கத்துடன் மேலாளர், வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர் 29.05.2024 அன்று 11.30 மணிக்கு நேரில் ஆஜராகும்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பந்தப்பட்டவர்கள் 29.03.2024 அன்று 11.30 மணிக்கு நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

எனவே, மேலாளர், வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர் எழுத்து பூர்வ அறிக்கை நாள் 28.06.2024ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதத்தில் மேலாளர், வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோர்கள் திரு. நா. நாகபதி, திரு. நா. நாகராஜன் என்பவர்களின் மனுக்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை உரிய விளக்கத்துடன் 27.08.2024 அன்று 11.30 மணிக்கு நேரில் ஆஜராகும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்நகராட்சியில், பணிபுரிந்துள்ள மேலாளர், வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் உதவியாளர் ஆகியோர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களிடத்தில் நேரில் ஆஜராகி உரிய அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண். CRP (PD) (MD) 2195/2025/CMP CUD No.. 2993/2025, தீர்ப்புரை நாள் 11.08.2025ல் காணும் விபரப்படி மனுதாரார் திரு. நா. நாகராஜன், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டு, மேற்படி வழக்கில் 11.08.2025ம் தேதியில் தீர்ப்புரையில் பிரதிவாதியாக திரு. நா. நாகபதி என்பவர் ரூ.600000/- (அசல் வழக்கு எண். OS.0300002/2013) நான்கு வாரத்தில் வைப்புத் தொகையாக (deposit) செலுத்த உத்தரவிட்டும், வைப்புத் தொகை பெறப்பட்ட பின்பு கீழமை நீதிமன்றம் இவ்வழக்கினை மீண்டும் விசாரணையில் எடுத்துக்கொண்டு ஆணை வழங்கி முடிக்கப்பட்டுள்ளது.

சார்பு நீதிமன்ற வழக்கு எண். OS.0300002/2013ல் திரு. M. போஜராஜன், வழக்கறிஞர் அவர்களின் கடிதம் நாள் 03.02.2026ல் காணும் விபரப்படி, திரு. நாகபதி என்பவரின் வழக்கறிஞரின் கடிதத்தின்படி சார்பு நீதிமன்றம் வழக்கு எண். OS.0300002/2013 நிலுவையாக உள்ளது என்ற விபரம் தெரியவருகிறது.

மனுதாரர் தெரிவித்துள்ள சொத்துவரி குறித்த விபரம்

வ. எண்	2012-2013 இரண்டாம் அரையாண்டு முதல்	2021-2022 வரை	2022-2023	தற்போது உள்ள விபரம்
1.	வரி விதிப்புதாரர் பெயர் திரு. நா. நாகராஜன், கதவு எண். 25, பழைய வரி விதிப்பு எண் 13/40876 புதிய வரி விதிப்பு எண். 130/30/ 00900 அரையாண்டு சொத்து வரி ரூ.532/-	வரி விதிப்புதாரர் பெயர் திரு. நா. நாகராஜன், கதவு எண். 25, சொத்துவரி புதிய விதிப்பு எண்.130/30/ 00900 பழைய வரிவிதிப்பு எண். 13/40876 அரையாண்டு சொத்துவரி + SUC ரூ.532+180=712/–.	வரி விதிப்புதாரர் பெயர் திரு. நா. நாகராஜன், கதவு எண். 25, பழைய வரிவிதிப்பு எண் 13/40876, புதி விதிப்பு எண். 130/30/00900 வார்டு மறுவரையறை செய்த பின்பு பழைய வரிவிதிப்பு எண். 13/40876 புதிய வரிவிதிப்பு எண்.130/30/90056 அரையாண்டு சொத்துவரி + SUC ரூ.665 + 180 = ரூ.845/–	சொத்துவரி விதிப்பு எண். 130/30/90056 கதவு எண். 25, திரு. நா. நாகராஜன், அரையாண்டு சொத்துவரி + SUCரூ.705+180 =885/-
	30 ஆண்டு களுக்கு முன்பு சொத்துவரி விதிப்பு	2017–2018 முதல் 2021–2022 வரை	2022–2023 முதல் 2025-2026 முதலாம் அரையாண்டு வரை.	
	குறிப்பு: வார்டு எண். 30 பஜனை கூடத் தெரு வரிவிதிப்பு எண். 130/40876 கதவு எண்.25ல் 03.02.2023 தேதிய வருவாய் உதவியாளர் திருமதி பாண்டிச் செல்வி (தற்பொழுது விருதுநகர் நகராட்சி) மற்றும் வருவாய் ஆய்வாளர் திருமதி லட்சுமி (தற்பொழுது இராஜபாளையம் நகராட்சி ஆகியோர்களின் குறிப்பின்படி நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் நாகராஜன் என்ற பெயருடன் நாகபதி என்ற பெயரையும் சேர்ந்து சொத்துவரி ரசீது வழங்கப்பட்டுள்ளது. மேலும், அதே நிதியாண்டில் மேற்படி சொத்துவரியில் திரு. நாகபதி என்ற பெயரை நீக்கம் செய்து திரு. நாகராஜன் என்ற பெயரில் தற்பொழுது வரை சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது.			
2	வரி விதிப்புத்தாரர்கள் பெயர் திரு. நா.நாகபதி நாகராஜன் கதவு எண். 25/986/996 வரி விதிப்பு எண். 26296 அரையாண்டு சொத்துவரி ரூ.81/–.	FAS (Finance Accountancy System) லிருந்து 2017-2018 கணிணியில் புதிய மென் பொருள் UTIS (Urban Tree Information System) அறிமுகப்படுத்திய பின்னர் வரி விதிப்புதாரர்கள்	வரி விதிப்புதாரர்கள் பெயர் திரு. நா. நாகபதி நாகராஜன், கதவு எண். 32/25, பழைய வரி விதிப்பு எண். 130/26296 புதிய வரி விதிப்பு எண். 130/30/00264 திரு. நாநகராஜன் என்பவரின் 27.06.2022ம் தேதிய மனுவின் அடிப்படையில் 130/26296ஐ இந்நகர்மன்ற தீர்மானம் எண். 113, நாள் 30.06.2022–ன்படி அனுமதி பெற்று மேற்படி சொத்துவரி 2022-2023ம் முதலாம் அரையாண்டு முதல் ரத்து செய்யப்பட்டுள்ளது.	

		பெயர் திரு. நா. நாகபதி, நாகராஜன், கதவு எண். 32/25, பழைய வரிவிதிப்பு எண். 130/26296 புதிய வரிவிதிப்பு எண். 130/30/ 00264 அரையாண்டு சொத்துவரி + SUC ரூ.81+120=201/–	வார்டு மறுவரையறை செய்த பின்பு புதிய எண். 130/30/00264, 130/30/900451 ஆக கணிணியில் உள்ளது. சொத்துவரி தற்போது செலுத்த இயலாது.

திரு. நா. நாகராஜன் மற்றும் திரு. நா. நாகபதி அவர்கள் இருவரும் மேற்படி இடம் தங்களுக்கு உரிமையானது குறித்து உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்கியும், இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால், தொடர் நடவடிக்கை எடுக்க இயலாத சூழ்நிலையில், மனுதாரரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

மனுதாரரின் சொத்து விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

1. வார்டு எண்.2, பிளாக் எண். 4, நகரளவு எண். 986/1 – 74.00 ச.மீட்டர் பரப்பு – நாகபதி மனைவி கண்ணம்மாள்.

2. வார்டு எண்.2, பிளாக் எண். 4, நகரளவு எண். 986/2 – 57.50 ச.மீட்டர் பரப்பு – நாராயணசாமி நாயுடு மனைவி குப்பம்மாள்.

3. வார்டு எண்.2, பிளாக் எண். 4, நகரளவு எண். 996/1 – 117.50 ச.மீட்டர் பரப்பு – லேட் நாராயணசாமி மனைவி குப்பம்மாள், சுப்பையா நாயுடு மகன் தீனதயாளன், சுப்பையா நாயுடு மகன் ஜெயராம் சுப்பையா.

4. வார்டு எண்.2, பிளாக் எண்.4, நகரளவு எண்.996/2 – 49.00 ச.மீட்டர் பரப்பு சுப்பைய்யா நாயுடு மகன் ஜெயராம் சுப்பையா, லேட் நாராயணசாமி மனைவி குப்பம்மாள், நாகபதி மனைவி கண்ணம்மாள்.

இந்நகராட்சி குறிப்பாணை ந.க.எண்.7157/2022/அ1 , நாள் 24.02.2026ல் மனுதாரர் புகாரின் அடிப்படையில் 2022ம் நிதியாண்டில் பணிபுரிந்த வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளரிடம் விளக்கம் கோரப்பட்டது.

திருமதி. லட்சுமி, உதவியாளர், ராஜபாளையம் நகராட்சி என்பவரின் மனு நாள் 03.03.2026 மற்றும் திருமதி. பாண்டிச்செல்வி, இளநிலை உதவியாளர், விருதுநகர் நகராட்சி என்பவரின் மனு நாள் 03.03.2026 ஆகியவற்றின் மீது சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் பெறப்பட்டது.

மேலும், மனுதாரர் நகராட்சிக்கு எதிராக உண்மைக்கு புறம்பான செய்திகளை சமூக வலைதளம் மூலம் பரப்பி வருகிறார். இதனால் பொதுமக்களிடையே நகராட்சி மற்றும் நிர்வாகத்தின் மீதும் அவநம்பிக்கையினை ஏற்படுத்தி வருகிறார்.

மேலும், அன்னாரிடம் மேற்படி சொத்துவரிக்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தினால் மேற்படி சொத்துவரி நீக்கம் செய்திட நகராட்சி வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு கோரப்பட்டுள்ளது.

மேற்படி சொத்துவரி தொடர்பான சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண். OS No.0300002/2013 தற்பொழுது நிலுவையிலுள்ளது.

மேலும், நகராட்சி வழக்கறிஞரின் சட்டக் கருத்துருவின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு இறுதியான அறிக்கையினை சமர்ப்பிக்கின்றேன் என்பதை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகாருக்குள்ளான சொத்து தொடர்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண். OS No.0300002/2013 நிலுவையாக உள்ளது என எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரரிடம் இருந்து தொடர் புகார்கள் வந்தவண்ணம் உள்ளதால், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை **06.08.2026** அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் **22.07.2026** நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் **06.08.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“எனது வீட்டிற்கு 2012–13 முதல் 2026–27 வரை அனைத்து வரிகளையும் எனது பெயரில் மட்டும் செலுத்தியுள்ளேன். 2020–21 மற்றும் 2021–22 ஆகிய இரண்டு நிதியாண்டுகளுக்கு உரிய காலாண்டில் சொத்துவரிகளை செலுத்தி விட்டேன். எனது சொத்துவரி விதிப்பு எண்.130/030/00900 பழைய எண்.130/40876 ஆகும். இந்நிலையில் வருவாய் ஆய்வாளர் திருமதி.லட்சுமி, வருவாய் உதவியாளர் திருமதி.பாண்டிச்செல்வி ஆகியோர் எனது வீட்டிற்கு வந்து 26.06.2022 அன்று (அரசு விடுமுறைதினம்) ரூ.804/– நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி பாக்கி உள்ளது என தெரிவித்தார்கள். நான் ஏற்கனவே 2020–21 மற்றும் 2021–22 ஆகிய இரண்டு நிதியாண்டுகளுக்கு கட்டிய இரசீதுகளை காண்பித்தேன். ஆனால் அதனை கண்டுகொள்ளாமல், ரூ.804/– ஐ என்னிடம் பெற்று சென்றார்கள். நானும் அரசின் நிதிநிலையினை ஏற்றுக்கொண்டு கொடுத்துவிட்டேன். 27.06.2022ல் இருவரும் எனது மகளிடம் இரசீதினை கொடுத்துவிட்டு சென்று விட்டார்கள். வீடு திரும்பியதும் இரசீதினை பார்க்கும்பொழுது செலுத்திய அதே நிதியாண்டுகளுக்கு மீண்டும் வசூல் செய்துள்ளது தெரிய வந்தது. மேற்படி இரசீதின் சொத்துவரி விதிப்பு எண்.130/030/00264 பழைய எண்.130/26296 என இருந்தது.

08.01.2026ல் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ரூ.804/–க்கான இரசீதில் சொத்துவரி விதிப்பு எண். 130/030/900421 பழைய எண்.130/26296 என இருந்தது. 04.03.2026ல் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட இரசீதில் வரிவிதிப்பு எண்.130/030/900056 எனவும் பழைய எண்.130/40876 எனவும் உள்ளது. வரிவிதிப்பில் எனது பெயருக்கு பதிலாக திரு.நாகப்பா என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபற்றி கேட்டதற்கு கணினியின் தவறு காரணமாக ஏற்பட்டுவிட்டது என தெரிவித்தனர்.

இவ்வாறாக ஒவ்வொரு இரசீதுகளிலும் வெவ்வேறான சொத்து வரிவிதிப்பு எண்களும், உரிய நிதியாண்டில் நான் செலுத்திய சொத்துவரிக்கும், 27.06.2022ல் தயார் செய்யப்பட்ட சொத்து வரிக்கும் பெருமளவில் வேறுபாடுகள் உள்ளன. எனவே சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன்

கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு, 2013ம் ஆண்டிலிருந்து இன்று வரை நிலுவையில் இருந்து வருகிறது என்பதையும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் தெரிவித்துக்கொள்கிறேன்.".

6. எதிர்மனுதாரரான ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையர் **06.08.2026** அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் தெரிவித்துள்ள வரிவிதிப்பு கணினியில் தவறுதலாக பதிவாகியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டு, தவறுக்கு காரணமானவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரரின் சொத்து தொடர்பாக அவரது சகோதரர் திரு.நாகபதி என்பவரால் ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, வழக்கு எண்.0300002/2013 நிலுவையில் இருந்து வருகிறது.

மேலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாரரின் சொத்து தொடர்பாக வழக்கு எண்.2195 of 2025 முடிவுற்றுள்ளது. மேலும் மனுதாரரிடம் நேரில் ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரியதில், விசாரணையின்போது இருவரும் சொத்து சம்மந்தமான ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை.

மேற்கண்ட விவரங்களை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்பு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.".

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரரின் புகாருக்குள்ளான சொத்து தொடர்பாக திரு. நாகபதி என்பவரால் தொடரப்பட்ட வழக்கு O.S. No.0300002/2013 ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தற்போது வரை நிலுவையாக உள்ளதாக மனுதாரரின் வாக்குமூலம், எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பது கவனத்தில் கொள்ளப்பட்டது.

2014–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு **10 (3) (b)** ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளதும் கருத்தில் கொள்ளப்பட்டது.

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,-

(a) xxx xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx xxx

இந்நேர்வில், மனுதாரரின் சொத்து தொடர்பான வழக்கு O.S.No.0300002/2013 மாண்பமை ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், 2014–ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b) ன்படி மனுதாரரின் புகார் மனு விசாரிக்க இயலாது என்பதால், மனுதாரரின் மனுமீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. நா. நாகராஜன்,
25/32, பஜனைக் கூடத் தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் - 626125,
விருதுநகர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி,
ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்- 626125.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்,75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்.
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்,75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்.
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்– மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்.
இகோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை-600 032

க.க. 19/8/26
செயலாளர்.
6/7